செ.கு.எண் : 193 நாள் : 24-05-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 24.5.2012

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், நடுச்சூரங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. குட்டியப்பன் என்பவரின் மகள் செல்வி அந்தோணியம்மாள் 21.5.2012 அன்று இடி, மின்னல் தாக்கியதில் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 22.5.2012 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் அகால மரணமடைந்த செல்வி அந்தோணியம்மாள் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இவ்விபத்தில் காலமான செல்வி அந்தோணியம்மாள் குடும்பத்திற்கு மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9